1979 மார்ச் 5] [பேரவைத் துணைத் தலைவர்]

ஆகவே, * என்று எழுதுகிறார் என்று சொன்னதை மட்டும் சபைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தர விடுகிறேன். 'நீதிப்படி செய்க' என்று சொன்னது இருக்கட்டும். பொதுவாகச் சொன்னால் லட்சக்கணக்கான பைல்கள் பார்க்கப் படுகின்ற நிலையில் எல்லாவற்றையும் பார்ப்பது என்பது முடி யாத ஒன்றாகும். சரியான காரணங்களை வைத்துக் கொண்டு குறிப்பாகச் சொல்ல வேண்டும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடி வுற்று மீண்டும் 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 6-ம் நாள் செவ் வாய்க்கிழமை காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை 1-33 மணி அளவில் ஒத்திவைக்கப் பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

105. தமிழ்நாடு 1976-ம் ஆண்டு தனியார் கல்லூரி (ஒழுங்கு முறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கல்வித் துறையின் 1978-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17-ம் நாளிடப் பெற்ற 1334ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1976-ம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு முறை) சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 19/1976) 54 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

106. புதுக்கோட்டை அங்காடிக் குழு ஒன்று நிறுவுவதன் காரணமாக திருச்சிராப்பள்ளி அங்காடிக் குழுவின் அறிக்கை யிடப் பெற்ற பகுதிகளிலிருந்து குளத்தூர், ஆலங்குடி, திருமயம் ஆகிய வட்டங்களையும், தஞ்சாவூர் அங்காடிக் குழுவின் அறிக் கையிடப் பெற்ற பகுதியிலிருந்து அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு ஆகிய வட்டங்களிலிருந்து ஒரு சில பகுதிகளையும் நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 4-ம் நாளிடப் பெற்ற 1764-ம் எண் அரசாணை யின் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

107. மாணவர்களின் எண்ணிக்கைக் குறைவாக இருப்பதனால் வகுப்பு ஒன்றை மூடுவது குறித்து தமிழ்நாடு 1976-ம் ஆண்டு தனியார் கல்லூரி (ஒழுங்கு முறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது பற்றிய கல்வித் துறையின் 1978-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25-ம் நாளிடப் பெற்ற அரசாணை எண் 1764-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1976-ம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு முறை) சட்டத்தின் (குடியரசுத் தலைவர் சட்டம் 19/1976) 54 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

108. தமிழ்நாடு 1940-ம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 1978-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-ம் நாளிடப் பெற்ற 2585-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

109. தமிழ்நாடு 1973-ம் ஆண்டு தொழிலாளர் நலநிதி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையின் 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 14-ம் நாளிடப் பெற்ற அரசாணை எண் 1400-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1972-ம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41 (5)-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

110. தமிழ்நாடு 1972-ம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் அனைத்து விதித் துறைகளிலிருந்தும் தமிழ் நாட்டில் அமைந்துள்ள பாதுகாப்புப் படைக்கல அமைப்புகளுக்கு விலக்களிப்பது குறித்து, தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையின் 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 27-ம் நாளிடப் பெற்ற அரசாணை எண் 1486-ல் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1972-ம் ஆண்டு தொழிலாளர் நலநிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

% 111. 1974–75-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலத் தொழில் அபிவிருத்திக் கழகத்தின் (வரையறுக்கப் பெற்றது) நான்காவது ஆண்டறிக்கை. [1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]